# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதி அதிகாரசபை (திருத்தம்)

***1999 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதி அதிகாரசபைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*விளையாட்டுத்துறை அமைச்சர் அவர்களால் 2017, யூன் மாதம் 21 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2017, மே மாதம் 22 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ *186 ஆம் சட்டமூலம்* ]

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

**வாசகம் 2 :** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் தத்துவங்களின் நோக்கெல்லையை விரிவுபடுத்துவதன் மூலம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1999 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதி அதிகாரசபைச் சட்டத்திற்கான விரிவுப் பெயரைத் திருத்துகின்றது.

**வாசகம் 3 :** இவ்வாசகம், அதிகாரசபையின் குறிக்கோள்களைக் குறித்துரைக்கின்ற முதன்மைச் சட்டவாக்கத்திற்கு 2அ என்னும் புதிய பிரிவினை அறிமுகப்படுத்துகின்றது.

**வாசகம் 4 :** இவ்வாசகம், அதிகாரசபையின் தொழிற்பாட்டுப் பணிப்பாளரின் நியமனத்திற்கு ஏற்பாடு செய்வதன் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவினைத் திருத்துகின்றது.

**வாசகம் 5 :** இவ்வாசகம், அதிகாரசபையின் பணிகளின் நோக்கெல்லையை விரிவுபடுத்துகின்ற முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவினைத் திருத்துகின்றது.

**வாசகம் 6 :** இவ்வாசகம், அதிகாரசபையின் குறிக்கோள்களை எய்துவதற்கென அதற்கு தத்துவமளிக்கின்ற முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவினைத் திருத்துகின்றது.

**வாசகம் 7 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணையைத் திருத்துகின்றது என்பதுடன் அது இச்சட்டத்தின் 4 ஆம் வாசகத்தினால் முதன்மைச் சட்டவாக்கத்திற்குச் செய்யப்பட்ட திருத்தத்திற்கான விளைவாந்தன்மையினதாகும்.

# சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதி அதிகாரசபை (திருத்தம்)

*ச. வ. ஓ. 62/2016*

## 1999 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதி அதிகாரசபைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதி அதிகாரசபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1999 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப் பெயரினைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1999 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதி அதிகாரசபைச் சட்டத்தின் விரிவுப்பெயரானது "முகாமைசெய்வதற்கும், பேணுவதற்கும்;" என்னும் சொற்களுக்கு பதிலாக "முகாமைசெய்வதற்கும், பேணுவதற்கும், பாதுகாப்பதற்கும் மற்றும் விருத்திசெய்வதற்கும்;" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 2அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அச்சட்டவாக்கத்தின் 2அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும்:-

*"அதிகார சபையின் குறிக் கோள்கள்.*

2அ. அதிகாரசபையின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதியினை முகாமை செய்தல், பேணுதல், பாதுகாத்தல் அத்துடன் விருத்திசெய்தல்;

(ஆ) விளையாட்டுகளிலான சிக்கனம் மற்றும் விளையாட்டுகளிலான சுற்றுப்பயணம் என்பனவற்றின் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதியில் விளையாட்டுகள் மற்றும் பொழுது போக்கு செயற்பாடுகள் மற்றும் வசதிகளை முன்னேற்றுதல்;

(இ) நாட்டில் விளையாட்டுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதியில் கிடைக்கக்கூடிய வசதிகளை வழங்குதல்;

(ஈ) சமூக இணைப்புக்கும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் ஆதரவளிப்பதற்கும் கருவிகளாக விளையாட்டுகளும் பொழுதுபோக்குகளும் பயன்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துதல்; அத்துடன்

(உ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகள்மீதும் அத்தகைய கட்டணங்கள் மீதும், விளையாட்டுகள், கல்விசார், கலாசார மற்றும் பொழுதுபோக்கு செயற்பாடுகளுக்கான சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதியின் வசதிகள் கிடைக்கக்கூடியதாக செய்தல்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(3) அமைச்சர் -

(அ) சபையின் உறுப்பினர்களில் ஒருவரை அதிகார சபையின் தவிசாளராக இருப்பதற்கு நியமித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அதிகாரசபையின் அலுவல்களின் முகாமை மற்றும் நிருவாகம் என்பவற்றுக்கு வசதியளிப்பதற்கு அதிகாரசபையின் தொழிற்பாட்டுப் பணிப்பாள

ராக இருப்பதற்கு சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரை நியமித்தல் வேண்டும்.

(4) இச்சட்டத்திற்கான அட்டவணையின் ஏற்பாடுகள் சபையின் தவிசாளர், தொழிற்பாட்டுப் பணிப்பாளர் அத்துடன் சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஆகியோரின் பதவிக்காலம், அவர்களினால் பதவி வறிதாக்கப்படுதல், சபையின் கூட்டங்கள் மற்றும் அதிகாரசபையின் இலச்சினை தொடர்பில் பயனுறுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (அ) என்னும் பந்தியினை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன்மூலமும்:-

"(அ) சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத் தொகுதியை முகாமைசெய்தல், பேணுதல், பாதுகாத்தல் மற்றும் விருத்திசெய்தல் அத்துடன் அதை தேசிய சொத்தொன்றாகப் பாதுகாப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்;"; அத்துடன்

(2) அதன் (ஏ) எனும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

"(ஏ) விளையாட்டுகள், கல்விசார், கலாச்சார மற்றும் பொழுதுபோக்கு செயற்பாடுகளுக்காக சுகததாச தேசிய விளையாட்டுக்கள் கட்டிடத் தொகுதியின் வசதிகள் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய நிபந்தனைகள்மீதும் மற்றும் அத்தகைய தோதான செலவு பிரதிபலிக்கும் கட்டணங்கள்மீதும் கிடைக்கப்பெறச் செய்தல்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியினை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும்:-

"(அ) அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்வதற்கும் வைத்திருப்பதற்கும் அத்துடன் அதனை குத்தகைக்கு விடுவதற்கும் அல்லது வாடகைக்கு விடுவதற்கும்;"; அத்துடன்

(2) அப்பிரிவின் (ஒ) என்னும் பந்தியினை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும்:-

"(ஒ) இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாக, இடைநேர்விளைவாக அல்லது உகந்ததாக இருக்கக்கூடியவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் செய்வதற்கும் அல்லது அதனது பணிகளை நிறைவேற்றுவதற்கும்.".

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணையைத் திருத்துதல்.

**7**. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணையானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் 6 ஆம் விடயத்திற்குப் பதிலாக பின்வரும் விடயத்தினை இடுவதன்மூலமும்:-

"6. சபையின் தவிசாளர், தொழிற்பாட்டு பணிப்பாளர் அல்லது எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் சுகவீனம், இலங்கையில் இல்லாமை அல்லது வேறு ஏது காரணமாக, அவரது பதவிகளின் கடமைகளை தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதவராக இருக்குமிடத்து, அமைச்சர் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்திற்கொண்டு, அத்தகைய தவிசாளராக, தொழிற்பாட்டு பணிப்பாளராக அல்லது அத்தகைய உறுப்பினராக செயலாற்றவென விடயத்திற்கேற்ப, இன்னொரு பதவிவழி உறுப்பினரை அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினரை நியமிக்கலாம்.";

(2) அதன் 8 ஆம் விடயத்தில், ''தவிசாளரைப் பதவியிலிருந்து'' என்னும் சொற்களுக்குப் பதிலாக

"தவிசாளரை அல்லது தொழிற்பாட்டு பணிப்பாளரை பதவியிலிருந்து'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அதன் 9 ஆம் விடயத்தில், "தவிசாளர் அமைச்சருக்கு அதன் சார்பில் முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதம் ஒன்றின்மூலம் தவிசாளர் பதவியிலிருந்து விலகலாம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "தவிசாளர் அல்லது தொழிற்பாட்டுப் பணிப்பாளர் அமைச்சருக்கு அதன் சார்பில் முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதம் ஒன்றின்மூலம் முறையே தவிசாளர் அல்லது தொழிற்பாட்டுப் பணிப்பாளர் பதவியிலிருந்து விலகலாம்." அத்துடன்

(4) அதன் 10 ஆம் விடயத்தில், "தவிசாளரின் பதவிக்காலம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தவிசாளரின் அல்லது தொழிற்பாட்டு பணிப்பாளரின் பதவிக்காலம்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**8**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்